


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Vol: 03 | Issue: 9 | 4 Pages | 9.8.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
| மலர்: 03 | இதழ்: 9 | 4 பக்கங்கள் | 9.8.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |





**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**

**மற்றீண்டு வாரா நெறி**

**விளக்கம்:**

**கற்க வேண்டிய வற்றைக் கற்று இங்கு மெய்ப் பொருளை உணர்ந்தவர் , மீண்டும் இப்பிறப்பிற்கு வராத வழியை அடைவர்.**

## திருப்பதியில் பவித்ர பூர்ணாஹூதியுடன் பவித்ரோற்சவம் நிறைவு



ஆந்திரா, ஆக. 9

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் பூஜைகளின்போது, அறிந்தோ அறியாமலோ அர்ச்சகர்கள், ஆலய ஊழியர்கள் மற்றும் பக்தர்கள் செய்யும் தவறுகளால் நிகழும் தோஷங்களை நிவர்த்தி செய்வதற்காக ஆகம விதிகளின்படி பவித்ரோற்சவம் நடத்தப்படுகிறது.

அவ்வகையில் இந்த ஆண்டின் பவித்ரோத்சவம் கடந்த 5ம் தேதி தொடங்கியது. முதல் நாளில் பவித்ர பிரதிஷ்டையும், இரண்டாவது நாளில் பவித்ர மாலைகள் சமர்ப்பணமும் நடைபெற்றது.

மூன்றாவது மற்றும் நிறைவு நாளான நேற்று காலையில் ஸ்ரீ மலையப்ப சுவாமி, ஸ்ரீதேவி மற்றும் பூதேவி உற்சவ தெய்வங்களுக்கு ஸ்னாபன திருமஞ்சனம் செய்யப்பட்டது. பின்னர் உற்சவர்கள் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

இரவு 7 மணியளவில் பிரதான நிகழ்வான பவித்ர பூர்ணாஹூதி நடைபெற்றது. ஆகம விதிகளின்படி நடைபெற்ற பவித்ர பூர்ணாஹூதி நிறைவடைந்த பின்னர் மலையப்ப சுவாமி, ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் கோவிலைச் சுற்றி வந்து கருவறைக்குள் மீண்டும் நுழைந்தார். இத்துடன் பிவித்ரோற்சவம் நிறைவு பெற்றது.

இந்த சிறப்பு வழிபாட்டில் தேவஸ்தான நிர்வாக அதிகாரி சியாமளா ராவ், கூடுதல் அதிகாரி வெங்கையா சவுத்ரி, துணை நிர்வாக அதிகாரி லோகநாதன், பேஷ்கார் ராமகிருஷ்ணா மற்றும் அதிகாரிகள், பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

## எங்களிடம் இருந்து நீங்கள் தப்ப முடியாது ராகுல் காந்தி



புதுடெல்லி, ஆக. 9

பீகாரில் இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்குகாங்கிரஸ்உள்ளிட்டஎதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்த நடவடிக்கையின்மூலம்65லட்சம்வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும், இது நாட்டின் ஜனநாயகத்துக்கு மிகப் பெரிய ஆபத்தை ஏற்படுத்தும் செயல் என்றும் எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன. மேலும், தேர்தல் ஆணையம் ஆளும் பாஜகவின் ஓர் அங்கமாக செயல்பட்டு வருவதாகவும் அவை குற்றம் சாட்டியுள்ளன.

இந்தநிலையில், மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி எக்ஸ் தள பதிவில் கூறியதாவது:

வாக்கு திருட்டு என்பது வெறும் தேர்தல் மோசடி மட்டுமல்ல, அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகத்திற்கு எதிராக செய்யப்படும் ஒரு பெரிய மோசடி. ஒரு நாள் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சியாக மாறும், அப்போது நீங்கள் தப்ப முடியாது. இந்தியாவின் தேசத் தந்தைகள் கட்டமைத்த அஸ்திவாரத்தை அசைத்துப் பார்த்துள்ளீர்கள், இனி உங்களை தொட விடமாட்டோம்.

தேர்தல் ஆணையம் முழு விவரங்களையும் எங்களுக்கு வழங்க வேண்டும், இல்லாவிட்டால் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும். இதை செய்த ஒவ்வொரு தேர்தல் அதிகாரியும் பிடிபடுவார். உயர் பதவியில் இருந்தாலும் சரி கடைநிலையில் பணியாற்றினாலும் சரி என அதில் பதிவிட்டுள்ளார்.

## குடிப்பழக்கத்தை மறக்க நாட்டு மருந்து சாப்பிட்ட பெண் உள்பட 4 பேர் பலி



பெங்களூரு, ஆக. 9

கர்நாடகா மாநிலம் கலபுரகி மாவட்டம் சேடம் தாலுகா இமடாபுரா கிராமத்தை சேர்ந்தவர் சாயப்பா என்ற தாயப்பா. இவர், நாட்டு வைத்தியர் ஆவார். குடிப்பழக்கத்திற்கு அடிமையான வர்கள் நாட்டு மருந்துகளை சாப்பிட்டால் குடி பழக்கத்தை கைவிட்டு குணமடையலாம் என்று சாயப்பா கூறி வந்தார். அதன்படி, சேடம் அருகே புரகபள்ளி கிராமத்தை சேர்ந்தலட்சுமி, சித்தாப்புராதாலுகாபீமனஹள்ளியை சேர்ந்தமனோகர், சகாபாத் டவுனை சேர்ந்த கணேஷ் ராத்தோட், நாகேஷ் ஆகிய 4 பேரும் இமடாபுரா கிராமத்திற்கு நேற்று முன்தினம் வந்திருந்தனர்.

பின்னர் குடிப்பழக்கத்தை மறப்பதற்காக சாயப்பா கொடுத்த நாட்டு மருந்தை 4 பேரும் வாங்கி குடித்துள்ளனர். அதே நேரத்தில் 4 பேரின் மூக்கு வழியாகவும் நாட்டு மருந்தை சாயப்பா ஊற்றி இருந்தார். அதன்பிறகு, திடீரென்று 4 பேருக்கும் வாந்தி, மயக்கம் உள்ளிட்ட உடல் நலக் கோளாறு பாதிப்பு ஏற்பட்டது. உடனடியாக 4 பேரும் கலபுரகி மாவட்ட அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு லட்சுமி, கணேஷ் ராத்தோட் உயிரிழந்தனர்.

மனோகர், நாகேசுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் அவர்களும் நேற்று அதிகாலையில் உயிரிழந்தார்கள். இதனால் குடிப்பழக்கத்தை நிறுத்த நாட்டு மருந்து சாப்பிட்டு பலியானோர் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ளது. இந்த சம்பவம் கலபுரகியில் பரபரப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. இதுகுறித்து சேடம் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினர். விசாரணையில் சாயப்பா போலி நாட்டு வைத்தியர் என்பதும் தெரியவந்தது.

இதையடுத்து போலி நாட்டு வைத்தியரான சாயப்பாவை கைது செய்ய தீவிரம் காட்டினார்கள். அப்போது தெலுங்கானா மாநிலத்தில் அவர் தலைமறைவாக இருப்பது போலீசாருக்கு தெரியவந்தது. உடனே நேற்று காலையில் சேடம் போலீசார், தெலுங்கானா விரைந்தனர். பின்னர் தனது தங்கையின் வீட்டில் பதுங்கி இருந்த சாயப்பாவை கைது செய்தார்கள். அவரை, சேடம் அழைத்து வந்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். சாயப்பா கொடுத்த நாட்டு மருந்து விஷமாக மாறி 4 பேர் பலியானதாககூறப்படுகிறது. ஆனால்பிரேதபரிசோதனைஅறிக்கையில் தான் 4 பேரின் சாவுக்கு சரியான காரணம் தெரியவரும் என போலீசார் தெரிவித்துள்ளனர்.

# கோவில் திருவிழாவின்போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நிதியுதவி அறிவிப்பு

சென்னை ஆக. 9

கள்ளக்குறிச்சி மாவட்டம் புத்தமங்கலம் கிராமத்தில் கோவில் திருவிழாவின்போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கீழ் புத்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார் (வயது 36) என்பவர் நேற்று அதிகாலை சுமார் 12.30 மணியளவில் மேற்படி கிராமத்தில் நடைபெற்ற முத்துமாரியம்மன் கோவில் திருவிழா சாமி ஊர்வலத்தின்போது சகடையிலிருந்த குடை மின்கம்பியில் பட்டு அறுந்து கீழே விழுந்ததில் எதிர்பாராதவிதமாக கரகம்தூக்கிச்சென்ற மேற்குறிப்பிட்ட செந்தில்குமார் என்பவர் மின்சாரம்



தாக்கிஉயிரிழந்தார்என்றதுயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவரின்குடும்பத்தினருக்குமூன்று லட்சம் ரூபாய் முதல்அமைச்சரின் பொது நிவாரணநிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை கே.கே. நகரில் பேச மறுத்த காதலனை கம்பால் விரட்டி, விரட்டி தாக்கிய காதலி

சென்னை, ஆக. 9

சென்னை, கே.கே.நகர் அடுத்த நெசப்பாக்கம் பகுதியை சேர்ந்த 22 வயது இளம்பெண் சட்டக்கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார். இவருக்கும் அசோக்நகர் பகுதியைசேர்ந்தகார்பெண்டராகவேலை பார்த்து வரும் வாலிபர் ஒருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. இருவரும் கடந்த 6 ஆண்டுகளாக காதலித்து வந்தனர்.

கடந்த 2 வாரங்களுக்கு முன்பு காதலர்கள் இருவருக்கும் இடையே திடீரென தகராறு ஏற்பட்டது. இதனால் அந்த வாலிபர் காதலியுடன் பேசுவதை தவிர்த்து வந்ததாக தெரிகிறது. இளம்பெண் செல்போனில் பேச முயற்சி செய்தும் அவர் பேச மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது.

இதனால் இளம்பெண் காதலன் மீது கடும்கோபத்தில் இருந்து வந்துள்ளார். இந்தநிலையில் கே.கே.நகர் ஏ.பி.பட்ரோடு சாலையில் அந்த வாலிபர் தனது தாயுடன் நடந்து சென்று கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அங்கு அவரது காதலி தனது தங்கையுடன் அங்கு வந்தார். அவர்கள் இருவரும் அந்த வாலிபரை வழிமறித்து கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.திடீரென இளம்பெண் தனது காதலனை சிறிய கம்பால் அடித்து துவைத்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த வாலிபர் அங்கிருந்து ஓட முயன்றார். ஆனாலும் இளம்பெண் தனது தங்கையுடன் சேர்ந்து விரட்டி, விரட்டி காதலனை தாக்கினார்.

இதனைக்கண்டு வாலிபருடன் வந்த அவரது தாய் மற்றும் அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகள் அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் மோதலில் ஈடுபட்ட இளம்பெண் மற்றும் வாலிபரை சமாதானம் செய்து பொதுமக்கள் அங்கு இருந்து அனுப்பி வைத்தனர். இளம்பெண் தாக்குதலில் வாலிபருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் கே.கே.நகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

இதற்கிடையே பேச மறுத்த காதலனை நடுரோட்டில் காதலி தாக்கும் ந்த வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி பரவி வருகிறது. இது தொடர்பாக கே.கே.நகர் போலீசார் காதலர்கள் இருவரிடமும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## சிவகாசியில் பட்டாசு உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடிய எடப்பாடி பழனிசாமி

விருதுநகர் ஆக. 9

அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்அமைச்சருமான எடப்பாடி பழனிசாமி 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பயணத்தை மேற்கொண்டு வருகிறார்.

அந்த பயணத்தில் இன்று சிவகாசியில் அச்சக உரிமையாளர்கள், தீப்பெட்டி உற்பத்தியாளர்கள், பட்டாசு உற்பத்தியாளர்கள், காலண்டர் தயாரிப்பாளர்கள், மற்றும் வணிகர் சங்கத்தினருடன் எடப்பாடி பழனிசாமி கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

நிகழ்ச்சியில் பேசிய எடப்பாடி பழனிசாமி, ''பட்டாசு தொழில் நடத்துவதில் இருக்கும் சிரமத்தையும், பிரச்னைகளையும் சொன்னார்கள். இந்த நெருக்கடியான சூழலிலும் பட்டாசு தொழிலில் பல லட்சம் தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். வெளிநாட்டுக்கு பட்டாசு ஏற்றுமதியாகி அரசுக்கு வருமானம் வருகிறது ஒரு சிலர் பொதுநல வழக்கை உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த காரணத்தால்தான் இந்த பிரச்சினை வெடித்தது. நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அரசாங்கம் குறிப்பிட்ட அளவு மட்டுமே செயல்படும் நிலை உள்ளது. இந்த வழக்கு நடக்கும்போதே இதற்கு தீர்வுகாண அதிமுக ஆட்சியில் சம்பந்தப்பட்ட மத்திய மந்திரிகளை சந்தித்து பிரச்சினைகளை சொல்லி, கோர்ட்டில் மூத்த வழக்கறிஞர்களை நியமித்து வாதாட வைத்தோம்.

இருந்தாலும் தீபாவளி காலத்தில் ஒரு குறிப்பிட்ட நேரம் மட்டும் தான் பட்டாசு வெடிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு வரும் சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. சுப்ரீம் கோர்ட்டு மாசுக் கட்டுப்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பது பொது நல வழக்கை போட்டவர்களுக்கு சாதகமாகி விடுகிறது. நம் மாநிலத்தில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் ஒட்டு மொத்த இந்தியாவில் ஏற்படும் நிலை



களைஎடுத்துச்சொல்லித்தான்இதற்கு தீர்வுகாண முடியும்.

அதிமுகவைப் பொறுத்த வரையில், எல்லா தொழிலுக்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். உங்கள் பிரச்சினைகளை மாநிலங்களவை உறுப்பினர்கள் மூலம் எடுத்துச் சொல்வோம். மத்திய மந்திரிகளை சந்தித்தும் உங்கள் பிரச்னைகளை சொல்லி உதவி செய்யத் தயாராக இருக்கிறோம்.

அதிமுக ஆட்சியில் பட்டாசு தொழில் சிறக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். பட்டாசு தொழிலாளர்கள் தீக்காயத்தால் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க சிவகாசியில் 10 கோடி ரூபாயில் தீக்காய சிகிச்சை பிரிவு தொடங்கப்பட்டது. மதுரை அரசு மருத்துவமனையிலும் இது தொடங்கப்பட்டது. விருதுநகர் மாவட்டத்தில் பிரம்மாண்டமான அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையையும் கொண்டு வந்திருக்கிறோம். அடுத்து ஆட்சிக்கு வந்ததும் உங்களுடைய குறைகளைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி உதயகுமார், காமராஜ், கே.டி ராஜேந்திரபாலாஜி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான வழிமுறைகளை வெளியிட்ட மாசு கட்டுப்பாடு வாரியம்



சென்னை ஆக. 9

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் இந்து முன்னணி, இந்து மகாசபா மற்றும் இந்து அமைப்புகள் சார்பில் விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு நீர் நிலைகளில் கரைக்கப்படுவது வழக்கம். இதே போல் வீடுகளிலும் விதவிதமான விநாயகர் சிலைகளை வைத்து வழிபடுவார்கள். இந்த ஆண்டு விநாயகர் சதுர்த்தி வருகிற 27ந்தேதி கொண்டாடப்பட உள்ளது.

இந்த நிலையில் விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான வழிமுறைகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தொன்று தொட்டு சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களாகிய நமக்கு மிகப்பெரிய கடமை இருக்கிறது. நீர் நிலைகள் (கடல், ஆறு, ஏரி மற்றும் குளம்) நமக்கு குடிநீர் ஆதாரத்தை தருகிறது. நீர் நிலைகளை பாதுகாக்கும் வகையில் வருகிற விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும் போது, விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான மத்திய மாசுகட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதல்களின்படி (www.tnpcb.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது) மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கரைத்து சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். எனவே, பொது மக்களுக்கு கீழ்க்கண்டவாறு வேண்டுகோள் விடப்படுகிறது.

1. களி மண்ணால் செய்யப்பட்டதும் மற்றும் பிளாஸ்டர் ஆப் பாரிஸ் (PoP), பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் (பாலிஸ்டிரின்) கலவையற்றதுமான, சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப் பொருள்களால்மட்டுமேசெய்யப்பட்டதுமான விநாயகர்சிலைகளைநீர்நிலைகளில்பாதுகாப்பான முறையில் கரைக்க அனுமதிக்கப்படுகிறது.

2. சிலைகளின் ஆபரணங்கள் தயாரிப்பதற்கு உலர்ந்த மலர் கூறுகள், வைக்கோல் போன்றவை பயன்படுத்தப்படலாம். மேலும், சிலைகளை பளபளப்பாக மாற்றுவதற்கு மரங்களின் இயற்கை பிசின்கள் பயன்படுத்தப்படலாம்.

3. ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் மற்றும் தொர்மாக்கோல் பொருட்களை பயன்படுத்த கூடாது. நீர்நிலைகள் மாசுபடுவதை தடுக்கும்பொருட்டு வைக்கோல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மட்டுமே சிலைகள் தயாரிக்க அல்லது சிலைகள்/பந்தல்களை அலங்கரிக்க பயன்படுத்த வேண்டும்.

4. சிலைகளுக்கு வர்ணம் பூசுவதற்கு நச்சு மற்றும் மக்காத ரசாயனசாயம்/எண்ணெய் வண்ணப் பூச்சுகளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. சிலைகளின் மீது எனாமல் மற்றும் செயற்கைசாயத்தைஅடிப்படையாககொண்ட வண்ணப் பூச்சுகளை பயன்படுத்தக்கூடாது, மாற்றாக சுற்றுச்சூழலுக்குகந்த நீர் சார்ந்த / மக்கக்கூடிய / நச்சு கலப்பற்ற இயற்கை சாயங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

5. சிலைகளை அழகுபடுத்த வண்ணப்பூச்சுகள் மற்றும் பிற நச்சு ரசாயனங்கள் கொண்ட பொருட்களுக்கு பதிலாக, இயற்கை பொருட்கள் மற்றும் இயற்கை சாயங்களால் செய்யப்பட்ட அலங்கார ஆடைகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

6. விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் மத்திய மாசுகட்டுப்பாடு வாரியத்தின் விதிமுறைகளின் படி கரைக்கவேண்டும். விநாயக சதுர்த்தி விழாவினை சுற்றுச்சூழலை பாதிக்காதவாறு கொண்டாடும்படி பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தினகனி

9.8.2025

# கோவில் திருவிழாவுக்கு கொண்டு வரப்பட்ட 6 குதிரைகள் அடுத்தடுத்து சாவு




ஈரோடு, ஆக. 9

ஈரோடு மாவட்டம், அந்தியூர் குருநாதசுவாமி கோவில் தேர்த்திருவிழா வரும் 13ந் தேதி தொடங்கி 16ந் தேதி வரை நடைபெற உள்ளது. இதற்காக அந்தியூர் பகுதியில் கடைகள், கேளிக்கை அரங்குகள், குதிரை மற்றும் மாட்டு சந்தைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. திருவிழாவில் மாடு, குதிரை உள்ளிட்ட விலங்குகளின் சந்தை பிரபலமாக உள்ளது. குறிப்பாக இசைக்கு ஏற்ப நடமாடும் குதிரை உலக புகழ் பெற்றது. சந்தைக்கு கேரளா, கர்நாடகா, மராட்டியம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து விலங்குகள் கொண்டு வரப்படும்.

இந்நிலையில் இந்த ஆண்டுக்கான திருவிழாவை முன்னிட்டு கர்நாடக மாநிலத்தை சேர்ந்த சைஜா என்பவர் 24 குதிரைகளை சந்தைக்கு கொண்டு வந்தார். குதிரையின் பாதுகாவலராக பைரஸ் என்பவர் இருந்தார். நேற்று முன்தினம் இரவு குதிரைக்கு அருகில் உள்ள தோட்டத்தில் இருந்து வாளியின் மூலம் தண்ணீர் கொண்டு வைத்தார். வாளியில் யூரியா இருந்ததை கவனிக்காமல் தண்ணீர் எடுத்து வைத்ததில் 6 குதிரைகள் தண்ணீரை குடித்தது. யூரியாதண்ணீரை குடித்த 6 குதிரைகளும் ஒன்றன் பின் ஒன்றாக மயங்கி விழுந்து இறந்தன.

திருவிழாவை முன்னிட்டு சந்தையில் விற்பனை செய்ய கொண்டு வரப்பட்ட குதிரைகளில் 6 குதிரைகள் இறந்தது சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தெருக்களுக்கே சென்று நாய்களுக்கு தடுப்பூசி சென்னை மாநகராட்சி



சென்னை, ஆக. 9

தெரு நாய்களுக்கு மெகா ரேபிஸ் தடுப்பூசி போடும் திட்டத்தை சென்னை மாநகராட்சி ஆகஸ்ட் 9ஆம் தேதி தொடங்குகிறது. சென்னைமாநகராட்சி முழுவதும் 50 நாட்களில் 1.5 லட்சம் நாய்களுக்கு தடுப்பூசி செலுத்த 30 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவக்குழுக்கள் நேரடியாக தெருக்களுக்கே சென்று நாய்களுக்கு ரேபிஸ்தடுப்பூசி செலுத்துவார்கள். நாள் ஒன்றிற்கு 3,000 நாய்களுக்குதடுப்பூசிசெலுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தடுப்பூசி செலுத்தப்படும் நாய்களுக்கு அடையாள மை வைக்கப்படும் முன்னதாக தெரு நாய்களை பிடித்து கருத்தடை மையத்திற்குக்கொண்டு சென்று ரேபிஸ்தடுப்பூசி செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஊட்டியில் பெண்கள் குளிப்பதை வீடியோ எடுத்த ஓட்டல் ஊழியர் கைது

நீலகிரி, ஆக. 9

கேரள மாநிலத்தை சேர்ந்த இளம்பெண் ஒருவர் கடந்த 5ந் தேதி தனது குடும்பத்துடன் நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு சுற்றுலா வந்தார். தனியார் ஓட்டலில் அறை எடுத்து தங்கினர். அங்குள்ள குளியல் அறையில் இளம்பெண் குளித்து கொண்டிருந்தார். அப்போது திடீரென செல்போன் டார்ச் லைட் வெளிச்சம் வந்து உள்ளது.

இதனால் பயந்து போன அவர், சுற்றி பார்த்துள்ளார். அப்போது அருகில் உள்ள அறையில் இருந்து சிறிய துளை வழியாக செல்போன் மூலம் ஒருவர் வீடியோ எடுப்பது தெரிய வந்தது. அது ஓட்டல் ஊழியர்கள் தங்கும் அறை என்பதும் தெரிய வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த இளம்பெண், இதுகுறித்து போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு தெரிவித்து உள்ளார்.

அதன்பேரில் ஊட்டி மேற்கு போலீசார் ஓட்டலுக்கு சென்று விசாரணை நடத்தினர். அதோடு அங்கிருந்த ஊழியர்களின் செல்போன்களை வாங்கி சோதனைசெய்தனர். இதில் கேரள மாநிலம் மலப்புரத்தை சேர்ந்த நித்திஷ் (வயது 30) என்பவர் இளம்பெண் குளிப்பதை செல்போன் மூலம் வீடியோ எடுத்ததும் ஏற்கனவே 5க்கும் மேற்பட்ட பெண்களை வீடியே எடுத்ததும் தெரியவந்தது. இதையடுத்து நித்திஷை போலீசார் கைது செய்தனர்.

# 17ம் தேதி பூத் பொறுப்பாளர்கள் மாநாடு நயினார் நாகேந்திரன் அறிவிப்பு



சென்னை, ஆக. 9

திருநெல்வேலியில் ஆகஸ்ட் 17ல், 28 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பா.ஜ.க., பூத் கமிட்டி பிரதிநிதிகள் பங்கேற்கும் முதல் மாநாடு நடைபெற உள்ளது. இதில் அகில இந்திய தலைவர் நட்டா, உள்துறை அமைச்சர் அமித்ஷா, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரில் ஒருவர் பங்கேற்க வாய்ப்பு உள்ளது என மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தளபதிவில் தெரிவித்திருப்பதாவது:

பூத் வலிமைப்படுத்தும் பயணத்தில் ஒரு பகுதியாக பூத் பொறுப்பாளர்கள் மாநாடு வரும் 17 ஆம் தேதி திருநெல்வேலியில் நடைபெறுகிறது.

இதையொட்டி திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி, நிர்வாகிகளை, திருநெல்வேலியில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினேன்.

அப்போது, பிற சட்டமன்ற தொகுதிகளில் இருந்து வருகைதரும், பூத் முகவர்களுக்கு ஏற்படுத்தி தரவேண்டிய வசதிகள் மற்றும் மாநாட்டு பணிகளை எப்படி கவனிப்பது உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினேன்.

அப்போது, மாநில பொதுச்செயலாளர் மற்றும் கன்னியாகுமரி பெருங்கோட்ட பொறுப்பாளர் பாலகணபதி, திருநெல்வேலி வடக்கு மாவட்ட பாஜக தலைவர் முத்து பலவேசம், திருநெல்வேலி மாவட்ட பாராளுமன்ற பொறுப்பாளர் நீலமுரளி மற்றும் பாஜக நிர்வாகிகளும் உடன் இருந்தனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் வெட்டிக் கொலை: ஓ.பன்னீர்செல்வம் கடும் கண்டனம்



சென்னை, ஆக. 9

தமிழக முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

திருப்பூர் மாவட்டம், குடிமங்கலத்திற்குட்பட்ட பண்ணை வீட்டில் பணிபுரிந்து வந்த தந்தை மகன்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக சென்ற குடிமங்கலம் காவல் நிலையத்தைச் சேர்ந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சண்முகவேல் வெட்டி படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தியறிந்து ஆற்றொணாத் துயரமும், மிகுந்த மன வேதனையும் அடைந்தேன். உயிரிழந்த சண்முகவேலின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் கிராமத்தில் உள்ள பண்ணை வீட்டில் மூர்த்தி மற்றும் அவருடைய இரண்டு மகன்கள் பணிபுரிந்து வருவதாகவும், இவர்களுக்கிடையே நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தகராறில் மூர்த்தி அவரது மகன் தங்கபாண்டியன் தாக்கியதாகவும், இதுகுறித்து அருகிலிருந்தவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில், குடிமங்கலம் காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சண்முகவேல் மற்றும் காவலர் அழகுராஜா ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று அவர்களை விலக்கிவிட்டு, காயமடைந்த மூர்த்தியை மருத்துவமனைக்கு அனுப்ப ஏற்பாடு செய்ததாகவும், இதனால் ஆத்திரமடைந்த தங்கபாண்டியன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளரை கூர்மையான ஆயுதத்தால் தாக்கி படுகொலை செய்து விட்டு அங்கிருந்து தப்பித்துவிட்டதாகவும் ஊடகங்களில் செய்தி வந்துள்ளது பேரதிர்ச்சியை அளிக்கிறது. இந்தக் கொலைக்கு மூலக்காரணம் மதுஎன்றும்கூறப்படுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கும்மேற்பட்ட தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பட்டப்பகலில் படுகொலைகள், கொள்ளைகள், போதைக் கலாச்சாரம், பாலியல் துன்புறுத்தல்கள் என சட்டம் ஒழுங்கு சீரழிவுகள் தமிழ்நாட்டில் அன்றாடம் நடந்து கொண்டிருக்கின்றன. பெரும்பாலான சட்டம்ஒழுங்கு சீரழிவுகளுக்குமூலக்காரணமாக விளங்குவது மது என்று சொன்னால் அது மிகையாகாது. இதன் காரணமாக, வளர்ச்சிப் பாதையில் செல்ல வேண்டிய தமிழ்நாடு அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

மொத்தத்தில் காவல் துறையினருக்கே பாதுகாப்பு இல்லாத அவல நிலை தமிழ்நாட்டில் நிலவுகிறது. காவல் துறையினரையே தாக்கும் துணிச்சல் ரவுடிகளுக்கு ஏற்படுகிறது என்றால், அந்த அளவுக்கு மென்மையானப் போக்கினை தி.மு.க. அரசு கடைபிடிக்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாடு கொலை நாடாக மாறிக் கொண்டிருக்கிறது. இதற்கு முழுக் காரணம் தி.மு.க. அரசின் நிர்வாகத் திறமையின்மைதான். சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பும், கொலைவெறித் தாக்குதலுக்கு மூல காரணமாக விளங்கும் மதுவை ஒழிக்க வேண்டிய கடமையும் தி.மு.க. அரசிற்கு உண்டு.

முதல்அமைச்சர் சட்டம் ஒழுங்கு பிரச்சனையில் தனிக் கவனம் செலுத்தி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சண்முகவேலை வெட்டிக் கொலை செய்த குற்றவாளிகள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும், இனி வருங்காலங்களில் இதுபோன்ற குற்றச் செயல்கள் நிகழாமல் இருக்கவும், உயிரிழப்புகளுக்கு மூலக் காரணமாக விளங்கும் மதுவை ஒழிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பூர் எஸ்.எஸ்.ஐ. கொலை வழக்கு; 2 பேருக்கு 15 நாட்கள் நீதிமன்ற காவல்



திருப்பூர், ஆக. 9

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளத்தில் அ.தி.மு.க. மகேந்திரன் எம்.எல்.ஏ. மகேந்திரன் தோட்டத்தில் அப்பா, மகன் உள்ளிட்ட 4 பேர் மோதலில் ஈடுபட்டுள்ளதாக வந்த தகவலை தொடர்ந்து, விசாரணை நடத்துவதற்காக அங்கு எஸ்.எஸ்.ஐ. சண்முகவேல் மற்றும் காவலர் ஆகியோர் சென்றுள்ளனர்.

மோதலை தடுத்து சமாதானப்படுத்த முயன்றபோது, அவர்கள் எஸ்.எஸ்.ஐ. சண்முகவேலை வெட்டி கொன்றுள்ளனர். இந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், படுகொலை செய்யப்பட்ட எஸ்.எஸ்.ஐ. சண்முகவேல் உடலுக்கு காவல் துறை அதிகாரிகள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். இதனையடுத்து அரசு மரியாதையுடன் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

இந்நிலையில், எஸ்.எஸ்.ஐ. சண்முகவேல் கொலை வழக்கில் மூர்த்தி மற்றும் அவரது மகன் தங்கப்பாண்டியன் ஆகிய 2 பேர் திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சரண் அடைந்தனர். இதனிடையே மூர்த்தியின் மற்றொரு மகன் மணிகண்டன் என்கவுன்டரில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்நிலையில், இந்த வழக்கில் கைதான தந்தை மூர்த்தி, மகன் தங்கபாண்டிக்கு 15 நாட்கள் (ஆகஸ்ட் 21 வரை) நீதிமன்றக் காவல் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சென்னைப் பல்கலைக்கழக அலுவலர்களுக்கான ஊதியக்குறைப்பு நடவடிக்கையை கைவிட வேண்டும் டி.டி.வி. தினகரன்



சென்னை ஆக. 9

சென்னைப் பல்கலைக்கழக நிர்வாகத்தை முழுமையாக முடக்கும் ஆபத்தான முடிவை தி.மு.க. அரசு உடனடியாக கைவிட வேண்டும் என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் தாய்ப் பல்கலைக்கழகமாக விளங்கும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியத்தை திடீரென குறைக்க முடிவு செய்திருக்கும் தமிழக அரசின் நடவடிக்கையைக் கண்டித்து அப்பல்கலைக்கழக அலுவலர்கள் போராட்டம் நடத்தி வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மாணவர்களின் உயர்கல்விக்காகவும், எதிர்கால நலனுக்காகவும் நேரம், காலம் பார்க்காமல் பணியாற்றும் பேராசிரியர்களும் அலுவலர்களும் தங்களுக்கான ஊதியத்தையே உரிய நேரத்தில் பெறமுடியாமல் ஒவ்வொரு மாதமும் போராடி வரும் நிலையில், தற்போது அந்த ஊதியத்தையும் குறைக்க முடிவு செய்திருப்பது அவர்களுக்கு இழைக்கும் அநீதியாகும்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிலவும் நூற்றுக்கணக்கான காலிப்பணியிடங்களை நிரப்பவும், ஓய்வுபெறும் பணியாளர்களுக்கான பணப்பலன்களையும் வழங்க எந்தவித நடவடிக்கையும் எடுக்காத தி.மு.க. அரசு, நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி அலுவலர்களுக்கான ஊதியத்தைக் குறைக்க முடிவு செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

தமிழகத்தில் ஒருபுறம் ஊதிய உயர்வு கேட்டு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் போராடி வரும் நிலையில், மறுபுறம் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த ஊதியத்தைக் குறைக்கக் கூடாது என வலியுறுத்தி சென்னைப் பல்கலைக்கழக அலுவலர்களும் போராட்டத்தை முன்னெடுத்திருப்பது தி.மு.க. அரசின் நிர்வாகத் திறமையின்மையையே வெளிப்படுத்துகிறது. எனவே, சென்னைப் பல்கலைக்கழக அலுவலர்களுக்கான ஊதியக்குறைப்பு நடவடிக்கையை உடனடியாக கைவிடுவதோடு, அப்பல்கலைக்கழகத்திற்குச் சிறப்பு நிதியை ஒதுக்கி அங்கு நிலவிக் கொண்டிருக்கும் நிர்வாகச் சிக்கல்களைக் களையத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனத் தமிழக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஊரக வளர்ச்சித்துறையில் காலி பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் ; அமைச்சர் ஐ.பெரியசாமி தகவல்



திண்டுக்கல், ஆக. 9


திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் கலிக்கம்பட்டியில் ரூ.50 லட்சம் செலவில் சமுதாயக்கூடம், ஆலமரத்துப்பட்டி ஊராட்சியில் ரூ.80 லட்சம் செலவில் சமுதாயக்கூடம், போக்குவரத்து நகரில் ரூ.10 லட்சம் செலவில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி ஆகியவை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவும், கலிக்கம்பட்டியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமும் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் அமைச்சர் இ.பெரியசாமி கலந்து கொண்டு கட்டிடப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டி, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு சாதி சான்றிதழ், ரேஷன் அட்டை ஆகியவற்றை வழங்கி பேசியதாவது,

தி.மு.க. அரசு கடந்த 4 ஆண்டுகளாக அரசின் திட்டங்கள் அனைத்தும் கட்சி, இனம், மதம் பாகுபாடு இன்றி எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் செயல்படுத்தி வருகிறது. தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மக்களுக்கு வீடு தேடிச் சென்றடையச் செய்யும் வகையில், நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். கலைஞர் கனவு இல்லத்தின் மூலம் திண்டுக்கல் மாவட்டத்தில் 10 ஆயிரம் வீடுகள் கட்டப்பட உள்ளது.

தமிழகம் முழுவதும் 3 லட்சத்து 25 ஆயிரம் வீடுகள் கட்டப்படட்டு எல்லோருக்கும் வீடுகள் என்ற நிலையை உருவாக்குவதே கலைஞர் கனவு இல்லத்தின் நோக்கமாகும். நகராட்சி நிர்வாக துறையின் மூலம் 2538 காலி பணியிடங்கள் போட்டி தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான நியமன ஆணைகளை முதல்அமைச்சர் வழங்குகிறார். இதேபோல் உள்ளாட்சித் துறையில் காலியாக உள்ள கிராம ஊராட்சி செயலாளர்கள் பணியிடங்கள் அனைத்தும் வெளிப்படைதன்மையோடு எந்த புகாருக்கும் இடம் அளிக்காமல் விரைவில் நிரப்பப்படும்"என்றார்.

# சங்கரன்கோவிலில் ஆடித்தபசு திருவிழா கோலாகலம்: லட்சக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம்



தென்காசி ஆக. 8

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சங்கரநாராயணசாமி கோவில் தென் தமிழகத்தின் மிகவும் புகழ்பெற்ற சிவஸ்தலங்களில் ஒன்று. சிவன் வேறு, விஷ்ணு வேறு என்று பிளவுபடுத்துவது தவறு என்பதை பக்தர்களுக்கு உணர்த்தும் வகையில் சிவ பெருமாள் கோமதி அம்பாளுக்கு ஸ்ரீ சங்கரநாராயணராககாட்சி கொடுத்தார்.

இத்தகைய அரிய நிகழ்ச்சி ஆடித்தபசு திருவிழாவாக பக்தர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு திருவிழா கடந்த 28ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. திருவிழா நாட்களில் சுவாமி, அம்பாள் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான தேரோட்டம் நடைபெற்றது.

சிகர நிகழ்ச்சியான ஆடித்தபசு திருவிழா இன்று நடைபெற்றது. இதையொட்டி இன்று காலை 5 மணிக்கு சங்கரலிங்க சுவாமி, கோமதி அம்பாளுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு கோமதி அம்பாளுக்கு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டது. மதியம் 12 மணிக்கு மேல் தங்க சப்பரத்தில் கோமதி அம்பாள் ஆடித்தபசு மண்டபத்திற்கு எழுந்தருளும் நிகழ்ச்சியும், மாலை 4.15 மணிக்கு மேல் சங்கரநாராயணசாமி தபசு காட்சிக்கு புறப்பாடு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்த நிலையில் மாலை 6 மணிக்கு மேல் சங்கரநாராயணசாமி ரிஷப வாகனத்தில் கோமதி அம்பாளுக்கு தபசு காட்சி கொடுத்தார். ஆடித்தபசு திருவிழாவில் தென்காசி, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து இரவு 11 மணிக்கு சங்கரலிங்கசாமி யானை வாகனத்தில் புறப்பட்டு சென்று இரவு 11.30 மணிக்கு மேல் கோமதி அம்பாளுக்கு காட்சி கொடுக்கும் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

# தேசிய கைத்தறி நாள் விழா: நெசவாளர்களுக்கு விருதுகளை வழங்கினார் உதயநிதி ஸ்டாலின்



சென்னை, ஆக. 9

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் இன்று (7.8.2025) கலைவாணர் அரங்கத்தில் 11 வது தேசிய கைத்தறி நாள் விழா நடைபெற்றது. இவ்விழாவில் கைத்தறி நெசவாளர்களால் நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்ட தூய பட்டு தூய சரிகை கைத்தறி இரகங்களும், திறன்மிகு நெசவாளர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட தூய பட்டு, பருத்தி, கோரா மற்றும் சில்க் காட்டன் சேலைகள், புவிசார் குறியீடு இரகங்கள் (GI Products) மற்றும் ஏற்றுமதி ரக வீட்டு உபயோக ஜவுளி இரகங்கள் (Domestic and Export Variety) கண்கவரும் வகையில் அழகுற காட்சிப்படுத்தப்பட்ட காண்காட்சியை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கோ ஆப்டெக்ஸ்நிறுவனத்திற்கு மேம்படுத்தப்பட்ட மின் வணிக தளத்தை (Revamped Cooptex ecommerce Website) தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதல்அமைச்சர், 2024 2025ஆம் ஆண்டில் சிறந்த வேலைப்பாடு கொண்ட இரகங்களை திறம்பட நெசவு செய்த நெசவாளர்களை சிறப்பிக்கும் வகையில், 60 விருதாளர்களுக்கு மொத்தம் ரூ.10 லட்சத்திற்கான காசோலைகள் மற்றும் திறன்மிகு நெசவாளர் விருதுக்கான பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

மேலும், நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 25 பயனாளிகளுக்கு தலா ரூ. 4. லட்சம் வீதம் ரூ. 1 கோடி மானியத்தில் வீடு கட்டுவதற்கான ஆணைகளையும், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 25 பயனாளிகளுக்கு பணப்பலன் ஆணைகளையும், 24 பயளாளிகளுக்கு முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,200/ வீதம் ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளையும், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் காலஞ்சென்ற நெசவாளர்களின் 10 வாரிசுதாரர்களுக்கு மாதம் ரூ.1,200/ வீதம் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளையும், கைத்தறி நெசவாளர் முத்ரா கடன் திட்டத்தின் கீழ் 38 பயனாளிகளுக்கு ரூ.1.90 கோடிக்கான கடனுதவி ஆணைகளையும், 20 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.1.14 லட்சம் மதிப்பிலான தறி உபகரணங்களையும், தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் வழங்கினார்.

தொடர்ந்து, கோஆப்டெக்ஸ் சார்பாக சிறந்த மூன்று விற்பனை வளாகங்களுக்கு தலா ரூ.1.00 லட்சம், ரூ.75,000/ மற்றும் ரூ.50,000/ வீதம் ரொக்க பரிசுகளையும், சிறந்த மூன்று மண்டல அலுவலர்கள் மற்றும் சிறந்த மூன்று மின் வணிக விற்பனை நிலையங்களுக்கு விருது மற்றும் சான்றிதழ்களையும் தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் வழங்கினார்.

இவ்விழாவில் தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தில் நெசவு மேற்பார்வையாளராகப் பணிபுரிய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 4 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், கூட்டுறவு நூற்பாலைகளில் சிறப்பாகப் பணிபுரிந்தமைக்காக 6 தொழிலாளர்களுக்கு தலா ரூ.25,000/ வீதம் "சிறந்த தொழிலாளர் விருதுகள்" மற்றும் தொழிலாளர்களின்குழந்தைகளில் 202425 ஆம் கல்வியாண்டில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெற்ற 19 மாணவ மாணவிகளுக்குரூ.67,000/ ரொக்கப்பரிசுகளையும் வழங்கினார்.

இவ்விழாவில் தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் முன்னிலையில், கோஆப்டெக்ஸ் நிறுவனம் சார்பாக அசாம் மாநில மற்றும் "வடகிழக்கு கைவினை மற்றும் கைத்தறி வளர்ச்சி கழகம்", (NEHHDC) கேரள மாநில "ஹேண்ட்டெக்ஸ்", (Hand Tex) மற்றும் சென்னையிலுள்ள "தட்சண சித்திரா" அறக்கட்டளை ஆகிய மூன்று அமைப்புகளுடன் ரூ.50.00 லட்சம் மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்விழாவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் வே. அமுதவல்லி, கைத்தறித் துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், கோ ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கவிதா ராமு, உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் நெசவாளர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக ஏற்றுமதி தொழில் நிறுவனங்களை காப்பாற்ற நடவடிக்கை தேவை: ஈ.ஆர். ஈஸ்வரன் அறிக்கை

சென்னை, ஆக. 9

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளார். அதில், அமெரிக்க அதிபர் டிரம்ப் அவர்களின் கூடுதல் வரிவிதிப்பு இந்திய ஏற்றுமதிக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்றாலும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக வளர்ச்சி அடைந்திருக்கின்ற, ஏற்றுமதி தொழிலை அதிகமாக தன்னகத்தே கொண்டிருக்கின்ற தமிழ்நாட்டிற்கு மிக அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும். தமிழகத்திலிருந்து ஜவுளி சார்ந்த ஏற்றுமதியும், வாகன உதிரி பாகங்கள், மருந்து வகைகள் மற்றும் தோல் சார்ந்த ஏற்றுமதியும் அதிக அளவில் நடந்து கொண்டிருக்கின்றன.



தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து ஏற்றுமதி சார்ந்த தொழிற்சாலைகளும் லட்சக்கணக்கான ஏழை மக்களுக்கு வேலை கொடுக்கின்றன.

ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் சிரமப்படும் என்பதை தாண்டி லட்சக்கணக்கான மக்கள் வேலை இழக்கும் அபாயமும் உண்டு. அதனால் அமெரிக்காவின் வரி விதிப்பை மத்திய அரசு பார்த்து கொள்ளும் என தமிழ்நாடு வேடிக்கை பார்க்க முடியாது. தமிழகத்தில் இருக்கின்ற தொழில் நிறுவனங்கள் மத்திய அரசிடமிருந்து உடனடி தீர்வுகளை எதிர்பார்ப்பது போல சரிசமமாக தமிழக அரசிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். தமிழகத்தின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கிற முதல்அமைச்சர் விரைவில் ஏற்றுமதி சார்ந்த தொழில் நிறுவனங்களை காப்பாற்ற நல்ல முயற்சிகளை எடுப்பார் என்று நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள்.

அந்த எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய தமிழக முதல் அமைச்சர் தாமதம் இல்லாமல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உடனடியாக ஏற்றுமதி சார்ந்த தொழில் அமைப்பின் பொறுப்பாளர்களை அழைத்து அவர்களுடைய கருத்துகளை கேட்டு தீர்வை நோக்கி பயணிக்க வேண்டுமென்று கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

# முதல்அமைச்சரின் தாயுமானவர் திட்டம்: 12ந்தேதி மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்

சென்னை, ஆக. 9

தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் "முதல்அமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை" சென்னையில் வருகிற 12ந்தேதி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை மக்களின் வீடு தேடிச் சென்றடையச் செய்யும் தமிழ்நாடு அரசின் உயரிய எண்ணத்தின் அடுத்த கட்டமாக, மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் "முதல்அமைச்சரின் தாயுமானவர் திட்டம்" முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினால் 12 ந்தேதி சென்னையில் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

மக்கள் நலன்சார்ந்த இத்திட்டம் சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இத்திட்டத்தின் வாயிலாக 34,809 நியாயவிலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்திறனாளிகளும், ஆக மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள குடும்ப அட்டைகள் மற்றும் பயனாளர்களின் விவரம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையிடமிருந்து பெறப்பட்டு, கள அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மின்னணு எடைத்தராசு, ePoS இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாகத் தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கே சென்று நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர்.

70 வயதுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்கள் வழங்குவதால் அரசுக்கு ரூ.30.16 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம், நலிவுற்ற பிரிவினரின் வாழ்வாதாரத்தை சிறப்புறச் செய்வதுடன் அவர்தம் உணவுப் பாதுகாப்பையும் உறுதிசெய்யும்.

முதல்அமைச்சர் 12 ந்தேதி இத்திட்டத்தை சென்னையில் தொடங்கிவைக்கும் வேளையில், மாவட்டங்களில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 20 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு

கர்நாடக காவிரி நீர்ப்பிடி ப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால் கிருஷ்ணராஜசாகர் (கே.ஆர்.எஸ்.) அணைக்கும், கபினி அணைக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்த இரு அணைகளில் இருந்தும் தமிழகத்துக்கு காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த நிலையில் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நேற்று காலை 18 ஆயிரம் கன அடியாக வந்தது. தற்போது காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்துள்ளது.இதன் காரணமாக இன்று காலை 8 மணி நில வரப்படி 20 ஆயிரம் கன அடியாக தண்ணீர் அதிகரித்து வந்தது.இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்த ருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

# பஸ் ஸ்டாண்டில் கேட்பாரற்று கீழே கிடந்த பணம் போலீசில் ஒப்படைப்பு: திருநெல்வேலி எஸ்.பி. பாராட்டு

திருநெல்வேலி ஆக. 9

திருநெல்வேலி மாவட்டம், அரசன்குளம், நடுத்தெருவை சேர்ந்த முருகன் (வயது 65) என்பவர் முக்கூடல் பஸ் ஸ்டாண்டில் கீழே கேட்பாரற்று கிடந்த பேக்கை திறந்து பார்த்த போது அதில் ரூ.48,500 பணம் இருந்துள்ளது. அப்பணத்தை உரிய நபரிடம் ஒப்படைக்கும் நோக்கத்தில் சேரன்மகாதேவி காவல் நிலையத்திற்கு வந்து நேர்மையான முறையில் ஒப்படைத்துள்ளார்.



மேலும் இது தொடர்பாக சேரன்மகாதேவி காவல்துறையினர் விசாரித்த போது, அந்த பணம் ஆலங்குளம், புதுபட்டியை சேர்ந்த செல்வகுமாரி என்பவருடையது என்று தெரியவந்தது. இதனை யடுத்து செல்வகுமாரியை சேரன்மகாதேவி காவல் நிலையம் வரவழைத்து, அவர் தவறவிட்ட பணத்தை போலீசார் உரிய முறையில் ஒப்படைத்துள்ளனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன், பணத்தை நேர்மையான முறையில் காவல் நிலையத்தில் ஒப்படைத்த முருகனை நேரில் அழைத்து அவருடைய நேர்மையை பாராட்டும் வகையில் பொன்னாடை அணிவித்து பாராட்டு சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கி கௌரவித்தார்.

# உத்தரகாண்ட் நிலச்சரிவு பெருவெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை விரைந்து மீட்க வேண்டும்: சீமான்



சென்னை, ஆக. 9

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

உத்தரகாண்ட் மாநிலம், உத்தரகாசி மாவட்டத்தில், அமைந்துள்ள தாராலி கிராமத்தில் மேக வெடிப்புக் காரணமாக ஏற்பட்ட திடீர் நிலச்சரிவு மற்றும் பெருவெள்ளம் காரணமாக, மக்களின் குடியிருப்பு பகுதிகள் முழுவதுமாக அடித்துச் செல்லப்பட்டு பலர் உயிரிழந்துள்ள பெருந்துயர நிகழ்வு பெரும் அதிர்ச்சியும், மிகுந்த மனவேதனையையும் அளிக்கிறது. மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்கள் உட்பட மேலும் பலர் பெருவெள்ளத்தில் சிக்கிக் காணாமல் போயுள்ள செய்தி சொல்லொணா துயரத்தைத் தருகின்றது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு என்னுடைய ஆறுதலைத் தெரிவித்து, துயரில் பங்கெடுக்கின்றேன்.

தாராலி கிராமத்திற்கு அருகில் உத்தரகாசி ஹர்ஷில் தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்காக அப்பகுதியிலிருந்த 10,000 தேவதாரு மரங்களை (ஊசியிலை மரங்கள்) அரசு வெட்டியதே பேரழிவை ஏற்படுத்தியுள்ள நிலச்சரிவு ஏற்பட முதன்மைக் காரணமெனக் கூறப்படுகிறது. வளர்ச்சி, முன்னேற்றம் என்ற பெயரில் நம்முடைய பாதுகாப்பு அரண்களாக விளங்கும் மலைகள், காடுகள், மரங்கள், நீர் வழிப்பாதைகள் உள்ளிட்ட இயற்கை வளங்களை அழிப்பது எத்தகைய பேராபத்தை ஏற்படுத்துகிறது என்பதை, இனியாவது நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

மக்கள் வசதியாக வாழ்வதைக் காட்டிலும் பாதுகாப்பாக வாழ்வது மிக முக்கியம். மக்கள் வாழத்தகுதியற்ற இடமாக மாறவிட்ட பிறகு, மரங்களை வெட்டி, கோடிகளைக் கொட்டி அமைத்த நெடுஞ்சாலையால் யாருக்கு என்ன பயன்? என்ற கேள்விக்கு எவரிடத்தில் பதிலுண்டு?

ஆகவே, இனி வரும் காலங்களில் உயிர்கள் வாழ உகந்த நிலமாக நாம் வாழும் பூமியை அடுத்த தலைமுறையிடம் கையளிப்பது தான் ஆகச்சிறந்த வளர்ச்சி என்பதை உணர்ந்து, தொழில் வளர்ச்சி, நாட்டின் முன்னேற்றம் என்ற பெயரில் இயற்கை வளங்களை அழித்தொழிப்பதை இனியாவது மத்தியமாநில அரசுகள் கைவிட வேண்டுமென வலியுறுத்துகிறேன். உத்தரகாசி மலைச்சரிவு – பெருவெள்ளப் பேரழிவில் சிக்கியுள்ள மக்களைக் காக்க மீட்புப்பணிகளை விரைவுபடுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திருப்பூரில் புதுப்பெண் தற்கொலை: கணவர் குடும்பத்தினரை கைது செய்ய வலியுறுத்தல்



திருப்பூர் ஆக. 9

திருப்பூர் கே.செட்டிப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் குப்புசாமி. தொழில் அதிபர். அவருடைய மனைவி சுகந்தி. இவர்களது மகள் பிரீத்தி (வயது 26). இவருக்கும், ஈரோடு மாவட்டம் வீரப்பன் சத்திரத்தை சேர்ந்த என்ஜினீயரான சதீஸ்வர் (30) என்பவருக்கும் கடந்த 11 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது.

திருமணத்தின் போது பிரீத்திக்கு 120 பவுன் நகை, சொகுசு கார், ரூ.25 லட்சம் வரதட்சணையாக பெற்றோர் கொடுத்ததாக கூறப்படுகிறது. கணவர் மற்றும் மாமியாருடன் ஏற்பட்ட தகராறில் பிரீத்தி கோபித்துக் கொண்டு, கடந்த மாதம் 11 ந்தேதி தனது பெற்றோர் வீட்டுக்கு வந்தார்.

பிரீத்தியின் பெற்றோர், சின்னக்கரையில் உள்ள சொத்தை சமீபத்தில் விற்பனை செய்துள்ளனர். இதில் பிரீத்தியின் பங்காக ரூ.50 லட்சம் வந்துள்ளது. அந்த பணத்தை சதீஸ்வர், தனக்கு கொடுக்குமாறு மனைவியிடம் தொடர்ந்து கேட்டதாக தெரிகிறது. இதனால் பிரீத்தி மனம் உடைந்த நிலையில், கடந்த சில நாட்களாக பெற்றோர் வீட்டில் சோகமாக இருந்தார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மாலை வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் பிரீத்தி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். வரதட்சணை கொடுமையால் பிரீத்தி தற்கொலை செய்து கொண்டதாக குடும்பத்தினர், உறவினர்கள் குற்றம்சாட்டினர்.

அதோடு பிரீத்தியின் உடலை வாங்க குடும்பத்தினர், உறவினர்கள் மறுத்தனர். வரதட்சணை புகார் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து திருப்பூர் ஆர்.டி.ஓ. மோகனசுந்தரம், பிரீத்தியின் குடும்பத்தினரிடம் விசாரணை நடத்தினார். வரதட்சணை கொடுமை செய்த கணவர், குடும்பத்தினரை கைது செய்ய வேண்டும் என்று தற்கொலை செய்த பெண்ணின் தாய்மாமா தியாகராஜ் வலியுறுத்தினார். அவிநாசியை சேர்ந்த புதுப்பெண் ரிதன்யா திருமணம் முடிந்த சில நாட்களில் வரதட்சணை கொடுமை உடல் மற்றும் மன ரீதியான சித்ரவதை பொறுக்க முடியாமல் தற்கொலை செய்த சம்பவத்தின் வடுவே இன்னும் ஆறாத நிலையில், திருப்பூரில் புதுப்பெண் ஒருவர் வரதட்சணை கொடுமையால் தனது உயிரை மாய்த்து கொண்ட சம்பவம் பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது

# சினிமா பாணியில் சம்பவம்: 17 ஆண்டுகள் காத்திருந்து தந்தையின் கொலைக்கு பழிக்குப்பழி வாங்கிய கல்லூரி மாணவன்



சென்னை ஆக. 9

சமீப காலமாக சினிமாவில் கேங்ஸ்டர் கதையம்சம் கொண்ட வன்முறைக் காட்சிகள் மிகுந்த திரைப்படங்கள் அதிக அளவில் வெளியாகி வருகின்றன. ஒரு கும்பல் குறிப்பிட்ட காரணங்களுக்காக மற்றொரு கும்பலை கொலை செய்வதும், அந்த கும்பலைச் சேர்ந்தவர்கள் சமயம் பார்த்திருந்து பழிவாங்குவதுமாக கதைகள் அமைக்கப்படுகின்றன.

இந்த நிலையில் சென்னையில், சினிமாவை மிஞ்சும் வகையில் ஒரு பழிக்குப் பழி கொலை சம்பவம் அரங்கேறியுள்ளது. 2 வயது சிறுவனாக இருந்தபோது, தந்தையை கொலை செய்த ரவுடியை 17 ஆண்டுகள் காத்திருந்து, இளைஞனான பிறகு பழிக்குப்பழி வாங்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை டி.பி. சத்திரம் ஜோதி அம்மாள் நகரைச் சேர்ந்தவர் புல்கான் ராஜ்குமார் (42 வயது). பி பிரிவு ரவுடியாக இருந்த இவர் திருந்தி வாழ்ந்து வந்தார். ரவுடி தொழிலை விட்டுவிட்டு அ.தி.மு.க.வில் இணைந்து பணியாற்றி வந்தார். இந்த நிலையில் நேற்று மாலை ராஜ்குமாரின் வீட்டுக்குள் புகுந்த 5 பேர் கொண்ட கும்பல் மனைவி மற்றும் குழந்தையின் கண்முன்னே ராஜ்குமாரை சரமாரியாக வெட்டிக் கொன்றது.

மனைவி மற்றும் குழந்தைக்காக என்னை விட்டு விடுங்கள் என்று ராஜ்குமார் கெஞ்சியும் அந்த கும்பல் ஈவு இரக்கமின்றி அவரை கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றது. இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், இது தொடர்பாக டி.பி. சத்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில் 2008ம் ஆண்டு கொலை செய்யப்பட்ட பிரபல ரவுடி செந்திலின் மகன் தந்தையின் கொலைக்காக 17 ஆண்டுகள் காத்திருந்து பழிதீர்த்ததாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ரவுடி செந்திலின்கொலை வழக்கில் தொடர்புடையதாக கூறப்படும் 3 பேர் ஏற்கனவே முன்விரோதம் காரணமாக கொலை செய்யப்பட்டு விட்டனர். ஒருவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு உயிரிழந்தார். இந்த நிலையில் செந்தில் கொலை வழக்கில் தொடர்புடைய ராஜ்குமார் மற்றும் இன்னும் ஒரு நபர் என இருவர் மட்டுமே உயிரோடு இருந்தனர். இந்த நிலையில்தான் ராஜ்குமார் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2008ம் ஆண்டு செந்தில் கொலை செய்யப்பட்டபோது 2 வயதாக இருந்த அவரது மகன் யுவனேஷ்தான் தற்போது வளர்ந்து பெரியவனாகி 17 ஆண்டுகளுக்குப் பிறகு தந்தையை கொலை செய்த ராஜ்குமாரை வஞ்சம் தீர்த்துள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர். சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஒரு கல்லூரியில் பிபிஏ முதலாமாண்டு படித்து வரும் யுவனேஷ் தனது கல்லூரி நண்பர்கள் சிலரை கூட்டாளிகளாக சேர்த்துக் கொண்டு திட்டம் போட்டு ராஜ்குமாரை கொலை செய்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட ராஜ்குமார், யுவனேஷை பார்க்கும் போதெல்லாம் 'உன் அப்பனை கொன்னவனே நான்தான்' என்று கூறி கெத்து காட்டியுள்ளார். இது யுவனேஷை மனதளவில் கடுமையாக பாதித்த நிலையில், ராஜ்குமார் மீது அதிக வெறுப்பை ஏற்படுத்தி, அவரை கொலை செய்வதற்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக யுவனேஷ் மற்றும் அவரது கல்லூரி நண்பர்கள் இருவரை போலீசார் கைது செய்துள்ளனர். மேலும் இருவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# நெல்லையில் தேசிய கைத்தறி தின சிறப்பு கண்காட்சி விற்பனை: கலெக்டர் சுகுமார் தொடங்கி வைத்தார்

திருநெல்வேலி ஆக. 9

திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் 11வது தேசிய கைத்தறி தினத்தினையொட்டி நடைபெற்ற சிறப்பு கைத்தறி கண்காட்சி விற்பனையை மாவட்ட கலெக்டர் சுகுமார், குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். மேலும் அவர், இந்த நிகழ்ச்சியில் 75 வயதைக் கடந்தும் நெசவுத் தொழில் செய்து வரும் 3 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி கௌரவித்தார்.



தொடர்ந்து நெசவாளர் முத்ரா கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மானியம் மற்றும் வட்டி மானியத்துடன் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் 7 உறுப்பினர்களுக்கு கடன் தொகையாக ரூ.6 லட்சமும், நெசவாளர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 11 நெசவாளர்களுக்கு வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளும் மற்றும் கைத்தறி குழுமத் திட்டத்தின் கீழ் 5 நெசவாளர்களுக்கு தறி உபகரணங்களையும் மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் திருநெல்வேலி சரக கைத்தறி உதவி இயக்குநர் ஆரோக்கியராஜ், கைத்தறி அலுவலர் செண்பகராஜ் மற்றும் கைத்தறி துறை அலுவலகப் பணியாளர்கள், நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# திருநெல்வேலி: மின் ஊழியரை தாக்கியவருக்கு 2 ஆண்டுகள் சிறை

திருநெல்வேலி ஆக. 9

திருநெல்வேலி மாவட்டம், வடக்கு தாழையூத்தைச் சேர்ந்த ஜேம்ஸ்ராஜ் (49) என்பவர் கடந்த 2019ம் ஆண்டு, டவுண் பகுதியை சேர்ந்த மின் ஊழியரை தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இதுகுறித்து மின் ஊழியர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில், தாழையூத்து காவல் துறையினர் அடிதடி வழக்காக பதிவு செய்து ஜேம்ஸ்ராஜை கைது செய்தனர். இவ்வழக்கு விசாரணை திருநெல்வேலி மூன்றாவது குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், நேற்று (6.8.2025) நீதித்துறை நடுவர் ஜெய சங்கரகுமாரி குற்றம் சாட்டப்பட்ட ஜேம்ஸ்ராஜிக்கு எதிரான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு, அவருக்கு IPC 294(b)ன்படி மூன்று மாதங்கள் சிறை தண்டனை, IPC 355ன்படி இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனையும், IPC 353ன்படி இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையும், ரூ.3,000 அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார். மேலும் அவர் மேற்சொன்ன சிறை தண்டனையினை ஏக காலத்தில் அனு பவிக்க உத்தரவிட்டார்.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையை துரிதமாக மற்றும் திறம்பட கண்காணிப்பு செய்த டி.எஸ்.பி. ரகுபதிராஜா மற்றும் தாழையூத்து காவல் நிலைய அலுவலர்களையும், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்குரைஞர் ஏஞ்சல் செல்வராணி ஆகியோரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# பரிதாபங்கள் யூடியூப் சேனல் மீது பரபரப்பு புகார்



நெல்லை, ஆக. 9

நெல்லை மாவட்டம் கவின் படுகொலை சம்பவத்துக்கு பிறகு, ஆணவப் படுகொலைகளை தடுக்க சிறப்பு சட்டம் இயற்ற வேண்டும் என்ற கோரிக்கை தமிழகம் முழுவதும் வலுத்து வருகிறது. ஆணவ கொலையை தூண்டிவிடும் சக்திகளுக்கு எதிராக நடவடிக்கைகளும் கடுமையாக்கப்பட வேண்டும் என்றும் பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வருகிறார்கள்.இந்த நிலையில்தான், கவின் ஆணவப் படுகொலை குறித்து பிரபல யூடியூபர்களான 'பரிதாபங்கள்' கோபி சுதாகர் தங்கள் பரிதாபங்கள் யூடியூப் சேனலில் வெளியிட்டிருக்கும் வீடியோவானது, பெரும்பாலானோரின் வரவேற்பை பெற்றது.

யூடியூப்பில் லட்சக்கணக்கான பார்வையாளர்களை இந்த வீடியோ பெற்றுள்ள நிலையில், பரிதாபங்கள் சேனலுக்கு எதிராக கோவை மாநகர காவல் ஆணையரகத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.இரு சமூகத்தினருக்கு இடையே மோதலை உண்டாக்கும்

வகையில் பேசி இருப்பதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது. அந்த புகார் மனுவில், பரிதாபங்கள் யூடியூப் சேனலில் இரு சமூகத்தினர் இடையே பிரச்சினையை உருவாக்கும் வகையில் பல்வேறு கருத்துக்கள் இருப்பதாகவும் குறிப்பிட்ட சமூகத்தின் அடையாளங்களை குறிப்பிட்டு அந்த சமூகத்தை இழிவுபடுத்தும் வகையில் பேசியிருக்கிறார்கள். அந்த வீடியோவை யூடியூப் தளத்தில் இருந்து நீக்க வேண்டும். மேற்கொண்டு இது போன்ற வீடியோக்கள் வெளியிடாதவறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

கோவையை சேர்ந்த வழக்கறிஞர் தனுஷ்கோடி என்பவர் பெயரில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. இந்த புகார் குறித்து ஆய்வு செய்த பிறகே இவ்விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கையை போலீசார் மேற்கொள்வார்கள் என போலீசார் தரப்பில் கூறப்படுகிறது.

# எம்பிபிஎஸ் முதல் சுற்று கலந்தாய்வு வரும் 12ம் தேதி வரை நீட்டிப்பு

சென்னை ஆக. 9

தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்ககம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் கல்லூரி நிர்வாக ஒதுக்கீட்டு எம்பிபிஎஸ், பிடிஎஸ் இடங்களுக்கான முதல் சுற்று பொது கலந்தாய்வு http:tnmedicalselection.net என்ற இணையதளத்தில் கடந்த ஜூலை 30ம் தேதி காலை 10 மணிக்கு தொடங்கியது. கடந்த 4ம் தேதி வரை இணையதளத்தில் பதிவு செய்து கல்லூரிகளை தேர்வு செய்ய அவகாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வரை நீட்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் அந்த அவகாசம் மீண்டும் ஆகஸ்ட் 12ம் தேதி மாலை 5 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் கல்லூரிகளை மாற்றிக் கொள்ள விரும்புவோர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். வரும் 13ம் தேதி இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இறுதி பட்டியல் 14ம் தேதி வெளியிடப்பட உள்ளது. கல்லூரிகளில் இடங்கள் ஒதுக்கீடு பெற்றதற்கான ஆணையை வரும் 14ம் முதல் 22ம் தேதி வரை பிற்பகல் 12 மணி வரை மாணவர்கள் பதிவிறக்கம் செய்யலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

9.8.2025

# திருநெல்வேலி: பாலியல் வழக்கில் 2 பேர் குண்டர் சட்டத்தில் கைது

திருநெல்வேலி ஆக. 9

திருநெல்வேலி மாவட்டம், களக்காடு, வடுவூர் பட்டி, தெற்கு தெருவை சேர்ந்த பெருமாள் மகன் கனகராஜ்(எ) கடற்கரையாண்டி (வயது 66) என்பவர் பாலியல் குற்ற வழக்கில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவர் மீது நாங்குநேரி அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மங்கையர்கரசி, தமிழ்நாடு குண்டர்தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன் பேரில் மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின்பேரில், நேற்று கனகராஜ்(எ) கடற்கரையாண்டி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இதேபோல் திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி, பட்டன்காடு, நடுத் தெருவை சேர்ந்த தங்கசாமி மகன் ராதாகிருஷ்ணன் (வயது 44) என்பவர் பாலியல் குற்ற வழக்கில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவர் மீது சேரன்மகாதேவி அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மாரீஸ்வரி தமிழ்நாடு குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன் பேரில் மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின்பேரில் ராதாகிருஷ்ணன் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்தவர் அடித்து கொலை: இறந்த நபர் யார்? போலீஸ் விசாரணை

சென்னை ஆக. 9

சென்னை வியாசர்பாடி ஜீவா ரெயில் நிலையம் அருகே உள்ள ஏ.ஏ. ரோடு நடைபாதையில் தலையில் ரத்த காயத்துடன் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் மயங்கி கிடப்பதாக வந்த தகவலின்பேரில் வியாசர்பாடி போலீசார், அந்த நபரை மீட்டு ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி அந்த நபர் நேற்று முன்தினம் இரவு பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து வியாசர்பாடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். விசாரணையில் வியாசர்பாடி ஏ.ஏ.ரோடு நடைபாதையில் வசித்து வரும் ஆசிப் என்ற கார்த்திக் (வயது 23) மற்றும் அவரது உறவினரான அலெக்ஸ் (27) ஆகியோர்தான் அந்த நபரை உருட்டுக்கட்டையால் அடித்துக்கொலை செய்தது தெரியவந்தது. அவர்கள் 2 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

கைதான ஆசிப், அலெக்ஸ் ஆகியோர் தங்கள் குடும்பத்துடன் அந்த பகுதியில் சாலையோரம் நடைபாதையில் வசித்து வருகின்றனர். சம்பவத்தன்று இரவு அனைவரும் நடைபாதையில் தூங்கி கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக குடிபோதையில் சென்ற கொலையான 50 வயது நபர், நடைபாதையில் படுத்து இருந்து ஆசிப்பின் உறவுக்கார 6 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

அதிர்ச்சி அடைந்த சிறுமி கூச்சலிட்டாள். சிறுமியின் அலறல் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்த ஆசிப், அலெக்ஸ் இருவரும் சேர்ந்து அந்த நபரை சரமாரியாக அடித்து உதைத்தனர். மேலும் அங்கு கிடந்த உருட்டுக்கட்டையால் தலையில் பலமாக தாக்கி அங்கிருந்து விரட்டியடித்தனர். இதில் படுகாயம் அடைந்த நபர் அங்கேயே மயங்கி விழுந்தார்.

அதன்பிறகுதான் பொது மக்கள் அளித்த தகவலின் பேரில் போலீசார் அந்த நபரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்து அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது தெரிந்தது.

உயிரிழந்த நபர் மருத்துவமனையில் சுயநினைவு திரும்பாமலேயே இறந்து விட்டதால் அவர் யார்? எந்த ஊர்? என்பது தெரியவில்லை.

கைதான 2 பேருக்கும் அவர் யார்? என தெரியாத நிலையில்தான் அடித்துக் கொன்று உள்ளனர். இதையடுத்து இந்த வழக்கை கொலை வழக்காக மாற்றிய போலீசார் கைதான 2 பேரிடமும் விசாரித்து வருகின்றனர். மேலும் கொலையானவர் யார்? என அடையாளம் காணும் முயற்சியிலும் போலீசார் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஆன்லைன் டெலிவரி ஊழியர்கள் மின்சார ஸ்கூட்டர் வாங்க ரூ.20 ஆயிரம் மானியம் தமிழக அரசு உத்தரவு



சென்னை, ஆக. 9

ஆன்லைன் பொருட்களை வினியோகிக்கும் தொழிலாளர்கள் மின்சார ஸ்கூட்டர் வாங்க ரூ.20 ஆயிரம் மானியம் வழங்கும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் செயலாளர் வீரராகவ ராவ் வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:

"தமிழக சட்டசபையில் கடந்த 14.3.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட் அறிக்கையில், ''வேகமாக வளர்ந்து வரும் இணையம் சார்ந்த பொருளாதார சூழலில், இணையம் சார்ந்த சேவைப்பணிகளில் (ஆன்லைன் பொருட்களை வீடுகளுக்கு வினியோகிப்பவர்கள்) ஈடுபடும் இளைஞர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்து வருகிறது.

இந்த தொழிலாளர்களின் நலனுக்காக இணையம் சார்ந்த தற்சார்பு தொழிலாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டது. இந்த நலவாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 2 ஆயிரம் பேருக்கு புதிய மின்சார ஸ்கூட்டர் வாங்க தலா ரூ.20 ஆயிரம் மானியமாக வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்படும்'' என்று கூறப்பட்டுள்ளது.

இந்த திட்டம் குறித்த முன்மொழிவை அரசுக்கு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை இயக்குனர் அனுப்பியுள்ளார். அதில், இணையம் சார்ந்த சேவைப்பணிகளில் ஈடுபடும் 2 ஆயிரம் பேருக்கு ரூ.20 ஆயிரம் மானியமாக வழங்கும் திட்டத்திற்காக ரூ.4 கோடி நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தார். இந்த முன்மொழிவை அரசு கவனமுடன் பரிசீலித்து அதை ஏற்க முடிவு செய்துள்ளது. அதன்படி இந்த திட்டத்திற்காக ரூ.4 கோடி நிதி ஒதுக்கி அரசு உத்தரவிடுகிறது."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (9.8.2025)

**மேஷம்:** நம்பிக்கையுடன் செயல்பட்டால் தடைகள் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி சூழல் ஏற்படும். பணவரவு அதிகரிக்கும்.

**ரிஷபம்:** நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். வேலை தொடர்பான சுமைகள் குறையும். நண்பர்களின் உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** வியாபாரத்தில் லாபம் கூடும். உறவினர்களின் அன்பு பெருகும். மனநிறைவு தரும் செய்திகள் வரும்.

**கடகம்:** செலவுகள் குறைந்து சேமிப்பு அதிகரிக்கும். வீட்டில் ஆனந்த நிகழ்ச்சி நடைபெறும். உடல் நலம் மேம்படும்.

**சிம்மம்:** புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். உழைப்புக்கு மதிப்பு கிடைக்கும். பயணம் பயனுள்ளதாக அமையும்.

**கன்னி:** உற்சாகம் கூடும் நாள். நிதி நிலை மேம்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** மன உறுதி அதிகரிக்கும். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். நண்பர்களிடம் நல்ல செய்தி வரும்.

**விருச்சிகம்:** தடைகள் நீங்கி பணிகள் விரைவாக முடியும். சிந்தனை திறன் மேம்படும். எதிர்பாராத லாபம் கிடைக்கும்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை வளரும். கடன் சுமை குறையும். மகிழ்ச்சி தரும் அழைப்புகள் வரும்.

**மகரம்:** நீண்ட நாள் முயற்சிகள் பலிக்கும். வியாபாரவளர்ச்சி காணப்படும். உடல், மன ஆரோக்கியம் உயரும்

**கும்பம்:** உழைப்பிற்கு பலன் கிடைக்கும் நாள். பழைய நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். பணவரவு கூடும்.

**மீனம்:** எதிர்பாராத வருவாய் வரும். வீட்டு சூழல் அமைதியாக இருக்கும். குடும்பத்துடன் மகிழ்ச்சி நேரம் கழிப்பீர்கள்.

# பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் குறித்து போலி செய்தி தமிழக அரசு எச்சரிக்கை




சென்னை, ஆக. 9

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அரசு பள்ளியில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆய்வுக்கு சென்றதாகவும், அப்போது போதையில் இருந்த ஆசிரியருக்கு முதல் உதவி அளித்ததாகவும், பள்ளியின் நுழைவு வாயில் அருகே போதை மாத்திரை விற்றுக்கொண்டிருந்தவர்களை எச்சரித்ததாகவும் சமூக வலைத்தளத்தில் செய்தி பரவி வருகிறது. இதனை பலரும் கேலி, கிண்டல் செய்து பகிர்ந்து வருகின்றனர்.

இதையடுத்து தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், "பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பற்றி போலிச் செய்தி பரப்பப்படுகிறது. இதனை சமூக வலைத்தளங்களில் பரப்புவோர் மீது பள்ளிக்கல்வித் துறை சார்பில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறப்பட்டுள்ளது.

# எனக்கு பிடிக்காத நடிகை லைலா ஷாம் பரபரப்பு கருத்து




கொஞ்சல் பேச்சு, துருதுரு நடிப்பு என ரசிகர்களால் கொண்டாடப்பட்ட நடிகை, லைலா. தமிழ் தாண்டி தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழி படங்களிலும் நடித்துள்ளார். திருமணத்துக்கு பிறகு சினிமாவில் இருந்து விலகிய அவர், கார்த்தியின் 'சர்தார்' படத்தின் மூலம் மீண்டும் சினிமாவில் நுழைந்தார். விஜய்யுடன் 'தி கோட்' படத்தில் நடித்திருந்தார்.

இந்த நிலையில் லைலா குறித்து நடிகர் ஷாம் பகிர்ந்த விஷயம் வைரலாகி வருகிறது. அவர் கூறுகையில், எனக்கு பிடிக்காத நடிகை லைலாதான் என்று சொல்லலாம். 'உள்ளம் கேட்குதே' படத்தில் ஒரு மாதிரி தொந்தரவு செய்யும் கதாபாத்திரத்தில் படம் முழுக்க என்னை 'டார்ச்சர்' செய்வார்.

இதனால் ஒரு கட்டத்தில் இனி அவருடன் நடிக்கவே கூடாது என்று முடிவு செய்தேன். ஆனால் நிஜத்தில் அவர் மிகவும் ஜாலியான ஆள். நல்ல மனம் கொண்ட நடிகை" என்றார்.

# கனடா ஓபன் டென்னிஸ்; சாம்பியன் பட்டம் வென்றார் பென் ஷெல்டன்



பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள கனடா ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி டொராண்டோ நகரில் நடந்து வருகிறது. இதில் இன்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் முன்னணி வீரர்களான பென் ஷெல்டன் (அமெரிக்கா), ரஷியாவின் கரேன் கச்சனோவ் உடன் மோதினார்.

இந்த போட்டியின் முதல் செட்டை 7-6 (7-5) என்ற புள்ளிக்கணக்கில் கரேன் கச்சனோவ் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற அடுத்த இரு செட்களில் ஆதிக்கம் செலுத்திய பென் ஷெல்டன் 6-4, 7-6 (7-3) என்ற புள்ளிக்கணக்கில் கரேன் கச்சனோவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார்.

# ஜிம்பாப்வேவுக்கு எதிரான டெஸ்ட்: முதல் நாள் முடிவில் நியூசிலாந்து 174/1



நியூசிலாந்து கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது மற்றும் கடைசி போட்டி புலவாயோவில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்று முதல் இன்னிங்சை தொடங்கிய ஜிம்பாப்வே அணி ஆரம்பம் முதலே நியூசிலாந்து பந்துவீச்சில் தடுமாறியது.

தொடக்க ஆட்டக்காரர் ஆன பிரண்டன் டெய்லர் (44 ரன்கள்), மிடில் ஆர்டரில் தபட்ஸ்வா சிகா (33 ரன்கள்) ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தால் ஜிம்பாப்வே 100 ரன்களை கடந்தது. இவர்களை தவிர யாரும் 15 ரன்களை கூட தாண்டவில்லை.

48.5 ஓவர்கள் தாக்குப்பிடித்த ஜிம்பாப்வே முதல் இன்னிங்சில் 125 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அபாரமாக பந்துவீசிய நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி 5 விக்கெட்டுகளும், சக்காரி பவுல்க்ஸ் 4 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதனையடுத்து நியூசிலாந்து முதல் இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 39 ஓவர்களில் 1 விக்கெட்டை மட்டும் இழந்து 174 ரன்கள் எடுத்துள்ளது. நியூசிலாந்து தரப்பில் டெவான் கான்வே 79 ரன்னுடனும், ஜேக்கப் டபி 8 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

# ஆபாசமாக படங்களில் நடித்து பணம் சம்பாதித்ததாக வழக்கு: 'எனக்கு எதிராக சதி செய்கின்றனர்' நடிகை சுவேதா மேனன்



மலையாள பிரபல நடிகை சுவேதா மேனன். இவர் பொருளாதார லாபம் ஈட்டுவதற்காக ஆபாசமாக நடித்து பணம் சம்பாதித்ததாக கூறி கொச்சியை சேர்ந்த மார்டின் மேனாச்சேரி என்பவர் எர்ணாகுளம் ஜூடிசியல் கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். அதில், சுவேதா மேனன் ஆபாச விளம்பரத்தில் நடித்து, அதனை சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்து உள்ளார். எனவே, அவர் மீது வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என கூறப்பட்டு இருந்தது.

இந்த மனுவை விசாரித்த கோர்ட்டு, நடிகை மீது வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என உத்தரவிட்டது. அதன்படி, நடிகை சுவேதா மேனன் மீது 2 பிரிவுகளின் கீழ் கொச்சி மத்திய போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதற்கு எதிராகவும், தன் மீதான வழக்கை ரத்து செய்ய வேண்டும் என நடிகை சுவேதா மேனன் எர்ணாகுளம் முதன்மை ஜூடிசியல் கோர்ட்டை அணுக உள்ளதாக தெரிவித்து உள்ளார்.

இதுகுறித்து அவர் கொச்சியில் நிருபர்களிடம் கூறும்போது, மலையாள திரைப்பட நடிகர்கள் சங்கத்தின் (அம்மா) தலைவர் பதவிக்கு நான் போட்டியிடுகிறேன். எனக்கு எதிராக ஒரு தரப்பினர் திட்டமிட்டு செய்த சதி காரணமாகவே, இந்த வழக்கு போடப்பட்டு உள்ளது. இதனை சட்டப்படி சந்திக்க உள்ளேன். அத்துடன் என் மீது எந்த குற்றமும் இல்லை என்பதை நிரூபிப்பேன். அதற்காக தன்னிலை விளக்கம் கொண்ட மனுவை கோர்ட்டில் தாக்கல் செய்ய உள்ளேன் என்றார்.

# குத்துச்சண்டை அதிகாரி மீது லவ்லினா பரபரப்பு குற்றச்சாட்டு




இந்திய முன்னணி குத்துச்சண்டை வீராங்கனையான அசாமை சேர்ந்த லவ்லினா போர்கோஹைன் 2020ம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்தார். இதே போல் 2023ம் ஆண்டு உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்று அசத்தினார். 27 வயதான லவ்லினா, இந்திய குத்துச்சண்டை சம்மேளனத்தின் செயல் இயக்குனர் அருண் மாலிக் தன்னை அவமதிப்பு செய்ததாக குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மத்திய விளையாட்டுத்துறை மந்திரி மன்சுக் மாண்டவியா மற்றும் இந்திய விளையாட்டு ஆணையம் (சாய்), ஒலிம்பிக் பதக்க வாய்ப்பு திட்ட பிரிவு, இந்திய குத்துச்சண்டை சம்மேளனம் ஆகியவற்றுக்கு அனுப்பியுள்ள புகார் கடிதத்தில், 'கடந்த மாதம் 8ந்தேதி குத்துச்சண்டை சம்மேளனம் மற்றும் ஒலிம்பிக் பதக்க வாய்ப்பு திட்ட பிரிவு நிர்வாகிகள் கூட்டத்தில் ஆன்லைன் மூலம் நான் பங்கேற்றேன். அப்போது தேசிய பயிற்சி முகாமுக்கும், பயிற்சிக்காக ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் போதும், எனது தனிப்பட்ட பயிற்சியாளரை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

உடனே குத்துச்சண்டை சம்மேளன அதிகாரி அருண் மாலிக் என்னை நோக்கி ஆவேசமாக இழிவுப்படுத்தும் வகையில் பேசினார். வாயை மூடு. தலை குனிந்து நாங்கள் சொல்வதை மட்டும் செய் என கூறினார். இதனால் மிகுந்த வேதனை அடைந்தேன். அவரது வார்த்தைகள் அவமரியாதைக்குரியவை மட்டுமல்ல. பாலின பாகுபாட்டை வெளிப்படுத்தும் எச்சரிக்கையாகவும், ஆதிக்க மனப்பான்மையும் கொண்டிருந்தன. இது தனிப்பட்ட இழிவுப்படுத்துதல் மட்டுமல்ல. சாதிக்கும் கனவுகளோடு குத்துச்சண்டை களத்திற்கு வரும் ஒவ்வொரு வீராங்கனைகளுக்கும் எதிராக தொடுக்கப்பட்ட தாக்குதல் ஆகும். அவரது செயலை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது குறித்து நியாயமான முறையில் விசாரணை நடத்தி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று அதில் கூறியிருந்தார்.

அவரது குற்றச்சாட்டை மறுத்த அருண் மாலிக், 'தேசிய பயிற்சி முகாமுக்கு தனிப்பட்ட பயிற்சியாளருக்கு அனுமதி அளிக்கப்படுவது இல்லை என்பதை மரியாதையோடு தான் கூறினேன்' என்றார். இது குறித்து விசாரிக்க கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. அந்த கமிட்டி விசாரணை நடத்தி விரைவில் அறிக்கை தாக்கல் செய்ய இருப்பதாக 'சாய்' நிர்வாகி தெரிவித்தார்.

# அனிருத்துடன் பேடல் விளையாடிய தோனி



நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகியுள்ள கூலி படம். ரஜினி மட்டும் இல்லாமல் படத்தில் நாகர்ஜுனா, சத்யராஜ், ஸ்ருதிஹாசன், உபேந்திரா, சௌபின் சாஹிர், ஆமிர் கான் என திரை பட்டாளமே நடித்துள்ளார்கள். மேலும், நடிகை பூஜா ஹெக்டே மோனிகா என்ற பாடலுக்கு இசை அமைத்துள்ளார். லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்த படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. படம் வரும் 14ஆம் தேதி ரிலீஸ் ஆகவுள்ளது. ரஜினிகாந்த் நடிப்பில் வெளியாகும் 171வது படம் இதுவாகும். இது மட்டும் இல்லாமல், அவரது 50வது ஆண்டு திரைப்பயணத்தில் வெளியாகும் படம் என்பது குறிப்பிடத்தக்கது.

கூலி படம் வெளியாக இன்னும் ஒரு வாரம் தான் இருக்கிறது. இந்நிலையில், 'முன்னாள் கிரிக்கெட் வீரர் தோனி கூட செம கூலாக பெடல் விளையாடிக் கொண்டு இருக்கிறார் இசையமைப்பாளர் அனிருத். இது தொடர்பான புகைப்படங்களும் வீடியோக்களும் இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

அனிருத் செம ஜாலியாக பெடல் விளையாடுவதை பார்த்தால் கூலி படத்தில் தனது வேலைகள் அனைத்தையும் அவர் முடித்துவிட்டார் போலத் தெரிகிறதே என்று ரசிகர்கள் கமெண்ட் செய்து வருகிறார்கள். அதேபோல், தல தோனியுடன் இவர் இருப்பதால், இவர் ராஞ்சிக்குப் போனாரா? அல்லது அவர் சென்னைக்கு வந்துள்ளாரா? என்ற கேள்வியையும் ரசிகர்கள் மத்தியில் பரபரப்பாக கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.